REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 214

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ 24—0—0
6 மாதம்	ரூ 12—0—0
3 மாதம்	ரூ 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ 30—0—0
6 மாதம்	ரூ 15—0—0
3 மாதம்	ரூ 7—8—0

சென்னை: மாசிமீ 8உ வெள்ளி (19—2—54) ★ ★ ★ வெளியூர்: மாசிமீ 9உ சனி (20—2—54)

இந்தியை அரசாங்க மொழியாக்க மேலும் 15 ஆண்டுகள் தேவை

அரசியல் சட்டத்தில் உள்ள காலவரம்பு போதா!

அம்மொழிக்குள்ள எதிர்ப்பு பலம் பெறும் முறையில் ஆதாவுப் பேச்சு இருக்கிறது

சட்டத்தைத் திருத்த திராவிட மாநில அரசுகளின் கோரிக்கை

புதுடெல்லி, பிப். 19—

இந்தியக் குடியரசின் ஆட்சிமொழியாக இந்தியை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமெனத் தரப்பட்டுள்ள 15 ஆண்டு கால அளவு போதாது எனவும், மேலும் 10 அல்லது 15 ஆண்டுகள் தேவைப்படும் எனவும், அதற்கான முறையில் அரசியல் சட்ட விதிகளைத் திருத்தவேண்டும் எனவும், தென்னாடு—திராவிட—மாநில அரசுகள், யூனியன் சர்க்காரை வலியுறுத்தியுள்ளன.

இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் ஏதாவது செய்யவேண்டுமோ என்பதை அறிவிக்குமாறு, யூனியன் சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி இருந்தது. அதற்குத் தங்கள் கருத்தை அறிவிக்கும் முறையிலேயே தென்னாட்டு மாநில ஆட்சியினர் மேற்குறித்த கருத்தைத் தெரிவித்துள்ளனர் என்று, 'மெயில்' இதழின், டெல்லி நிருபர் அறிவித்துள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் பெற்ற அரசியல் நடைமுறை படிப்பினையினால், 15-ஆண்டு குறுகிய காலத்திற்குள் இந்தி மொழியை சாதாரணமான பொது மக்கள் விருப்பத்தோடு ஒப்புக்கொள்ளச் செய்வதென்பதோ அல்லது இந்தி பேசுகின்ற வடநாட்டு மக்களுக்குச் சரிநிகர் சமானமான மொழித் திறம் பெறுமாறு செய்வதென்பதோ ஒருக்காலும் இயலாது என, தங்களுடைய கோரிக்கைக்கான காரணங்களைக் குறிப்பிட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இந்தி மொழியைப் பரப்ப, இந்தி ஆதரவாளர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் போக்கு, இந்தி மொழிக்கு எதிராகக் காழ்ப்புக் கொள்ளும் ஒரு நிலையை பொது மக்களிடம் தோன்றச் செய்திருக்கிறது.

வங்க முதல் மந்திரி வீட்டு முன் ஆர்ப்பாட்டம்

—(:)—

துப்பாக்கிப் பிரயோகம் செய்து கூட்டம் கலைக்கப்பட்டது

கல்கத்தா, பிப். 18—

சம்பள உயர்வும், பஞ்சப்படி உயர்வும் கோரி ஆசிரியர்கள் தொடங்கியுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தில் இன்னும் ஒரு முடிவு ஏற்படவில்லை. ஆசிரியர்களின் கோரிக்கை இப்பொழுது ஒரு பொது மக்கள் பிரச்னையாக உருவெடுத்து விட்டது. காங்கிரசுக்கு எதிராக உள்ள பல அரசியல் கட்சிகளும் கிளர்ச்சியில் பங்கு கொண்டுள்ளன.

ஆசிரியர்களின் அமைதியான போராட்டம் விரும்பத்தகாத கோர சொரூபத்தைப் பெற்றுவிட்டது.

கவர்னர் மாளிகை முற்றுகை முடிந்து, சட்டசபை முன் ஆர்ப்பாட்டக் கட்டத்தைக் கடந்து, முதல் மந்திரி வீட்டு முன் ஆர்ப்பாட்டம் செய்யும் கட்டத்தில் வந்துள்ளது கிளர்ச்சி!

முதல் மந்திரி வீட்டு முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க, போலீசார், இரு முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். ஒருவருக்கும் உயிர் சேதமில்லை என்று சொல்லப்படுகிறது.

கூட்டத்தினர், நாட்டு வெடி குண்டுகளையும் கற்களையும் உபயோகித்தனர் என்று குறை சொல்லப்படுகிறது,

வாணக்காரர்கள் வாணங்களை செய்யக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளதாம்.

நாட்டு மருந்துக் கடையினரும், வெடியுப்பு, கெந்தகம், மனோசிலை போன்ற வெடி மருந்துகளை விற்கக் கூடாது என சர்க்காரால் உத்திரவிடப்பட்டிருக்கிறார்களாம்.

மீண்டும் சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் செய்ய எதிர்ப்பாளர்கள் முடிவுக்கு வந்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

ஐவர் வழக்கு

★

ஐவர் வழக்கு அப்பீல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு உயர்நீதி மன்றத்தில் வெளியாகிவிட்டது. இந்தத் திங்கள் 24-ம் நாள் அனேகமாக அப்பீல் விசாரணை நடைபெறக் கூடும் என்று அட்வகேட் நாராயண சாமி அவர்கள் அறிவிக்கிறார்.

ரயில்வே இலாகா கோரிக்கை

புதுடில்லி, பிப். 18—

1953-54 ஆண்டில் ரெயில்வே செலவினங்களுக்காக ரூபாய் 33,17,68,000-த்தை உபமானியமாக அங்கீகரிக்குமாறு கோரி, பார்லிமெண்டின் இரு சபைகளிலும் ரயில்வே மந்திரி சமர்ப்பித்தார்.

தீ விளைவித்த நாசம்

ரங்கூன், பிப். 18—

ரங்கூனுக்கு 100 மைல் கிழக்கேயுள்ள மௌல்மீனில் ஏற்பட்ட ஓர் தீ விபத்தில், 3,000 வீடுகள் நாசமாயிற்று; 20,000 பேர் வீடிழந்தனர்.

கவர்னர் சந்தானத்திற்கு கருப்புக்கொடி மரியாதை!

—:o:—

ஆர்ப்பாட்டம் செய்த 2,000 பேர்களில் 200 பேர் கைது!

நௌகாங், பிப். 17—

விந்தியப் பிரதேச கவர்னர் சந்தானம் அய்யங்கார், ஒரு மருத்துவ நிலையத்தைத் திறக்க அங்கு சென்றிருந்தார். முன்னேற்பாடாக 144 தடை சட்டம் நகரத்தில் பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

தடையை மீறி 2,000-க்கு அதிகமான எண்ணிக்கையினர் கவர்னரை மறித்து கருப்புக் கொடி காட்டினர். தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் போலீஸ் லாரியில் ஏற்றிச் செல்லப்பட்டு ஊருக்கு வெளியில் 15 கல் தொலைவில் விட்டு விடப்பட்டனர்.

வங்கக் குழப்பம் சென்னைக்கும் பரவுமா?

— (:) —

அந்நிலை ஏற்படுவதும் ஏற்படாததும் ஆச்சாரியார் கையில் இருக்கிறது

—(:)—

2000 பட்டம் பெற்ற ஆசிரியர்களின் உள்ளக்கிடக்கை?

சென்னை, பிப். 19—

சென்னை மாநிலத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் சுமார் 2,000 பேர் தங்கள் கோரிக்கைகள் குறித்து ஒரு மனுவை சென்னை சட்டசபைக்குச் சமர்ப்பிப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

சர்க்கார் உயர்தரப் பள்ளிகளில் எல். டி-களுக்கு முதல் கிரேடு உள்பட சம்பளம் அளிக்கப்படும் விகிதமே எல்லா உயர்தரப் பள்ளிகளிலும் தரப்பட வேண்டும் என்பது முதல் கோரிக்கை.

எந்தப் பள்ளிகளில், தலைமை ஆசிரியர்கள் சம்பளம் ரூ. 250—25—400 என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் எல். டி. ஆசிரியர்களுக்கு ரூ. 100—10—300 ஆக சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டும் என்பதும் இம்மனுவில் வற்புறுத்தப்படும். (நேசன்)

புதுக் கல்வித் திட்டம்

2,000 ஆரம்ப ஆசிரியர்கள் கூடி ஆலோசிப்பர்

சென்னை, பிப். 20—

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த சுமார் 2,000 ஆரம்ப ஆசிரியர்கள் சைதாப்பேட்டை ஆசிரியர்கள் கல்லூரியில் 20, 21 தேதிகளில் கூடி, புதிய கல்வித் திட்டம் பற்றியும்: அதை அமுல் நடத்துவதில் காணப்பட்ட பலன்களையும் குறித்து விவாதிப்பர்.

காப்பிக்கொட்டை விலை உயர்வு

கோயம்புத்தூர், பிப். 18—

கடந்த இருவாரங்களாக உன்னூர் மார்க்கெட்டில் காப்பிக் கொட்டை விலை அந்தருக்கு ரூ. 12-லிருந்து ரூ. 20 வரை அதிகரித்திருக்கிறதாம். சில்லரை விலையும் பவுண்டுக்கு ஒரு அணா உயர்ந்திருக்கிறதாம்.

ரயில்வே ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்?

புதுடில்லி. பிப். 18—

பல ஆண்டு ஊழியம் புரிந்துள்ள தற்காலிக ஊழியர்களை நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்காக அதிகப்படியாக நிரந்தரமான பதவிகளை ஏற்படுத்தும்படி ரயில்வேக்களுக்கு உத்திரவிட்டிருப்பதாக இந்திய மேல் சபையில் ரயில்வே உதவி மந்திரி தெரிவித்துள்ளார்.

1945-க்கு முன்பு நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு அது பொருந்தும் என அவர் மேலும் தெரிவிக்கையில் கூறினாராம்.

இரண்டடி முன்னேற சாத்தியமானால்......

—o—

ஓரடி எடுத்துவைக்க முயற்சி செய்வாராம்!

கர்நூல், பிப். 18—

"மதுவிலக்குச் சட்டத்தில் நியாயமான திருத்தங்களையோ மாறுதல்களையோ செய்வதாயிருந்தால், அம்மாறுதல்கள் அசல் லட்சியத்தைப் பாதிக்காதவைகளாயிருப்பின், காங்கிரஸ் கட்சி அதனை ஏற்றுக்கொள்ளும்; பிற்காலத்தில், இரண்டடி முன்னேற சாத்தியமென்றால், இப்போதைக்கு ஓரடி எடுத்துவைக்க நாங்கள் தயாராயிருக்கிறோம்,"

என்று, ஆந்திர உதவி முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி ஒரு பேட்டியின்போது குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 19—2—1954 வெள்ளி

அவசரச் சட்ட ஆட்சி!

இந்திய அரசியல் சட்டத்தில், எத்தகைய கட்டத்தில் குடியரசுத் தலைவர் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கலாம் என்பதற்கான ஒரு ஏற்பாடு இருந்து வருகிறது. மூன்று வகையான சந்தர்ப்பங்களில் அவசரச் சட்டங்களை தலைவர் போடலாம் என்று சட்ட விதி விளக்கம் தருகிறது. அதாவது, பாராளுமன்றம் இயங்காது ஓய்வு பெற்றுள்ள நேரத்திலும், நெருக்கடி நிலை ஏற்பட்ட நேரத்திலும், நெருக்கடியை சமாளிக்க பாராளுமன்றத்தைக் கூட்டி, ஒரு சட்டமியற்ற கால அளவு போதியதாக இல்லாத நேரத்திலும், குடியரசுத் தலைவர் அவசரச் சட்டங்களை விதிக்கலாம் என்று அரசியல் சட்டம் தலைவருக்கு உரிமையளிக்கிறது.

இந்திய அரசியல் சட்டம் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைத்துள்ள இந்த அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கும் உரிமையை, செயலாற்றுவது பற்றிய முக்கிய சிக்கலான சட்டப் பிரச்னை ஒன்றை டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பாராளுமன்றத்தில் கிளப்பி இருக்கிறார். பாராளுமன்றத்தின் முன் கூட்ட முடிவிற்கும், இந்தக் கூட்டத் துவக்கத்திற்கும் உள்ள இடைக் காலமான இரண்டு திங்களில், வாரத்திற்கு ஒன்றாக ஏழு அவசரச் சட்டங்களை குடியரசுத் தலைவர் பிறப்பித்து இருக்கிறார். அவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பதற்கான அதிகாரம் இந்திய சர்க்காருக்கு இருக்கிறதா இல்லையா என்ற கேள்வியை எவரும் கேட்கமாட்டார்கள். அத்தகைய அதிகாரம் இந்திய சர்க்காருக்கு உண்டு என அரசியல் சட்ட விதி கூறுவதை அனைவரும் அறிவர். ஆனால், போதிய காரணமில்லாமல் அவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பதினால், பாராளுமன்றத்தின் உரிமை பறிக்கப்படுகிறதா, இல்லையா என்பதைத்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று டாக்டர் கிருஷ்ணசாமி தனது கருத்தை விளக்கிக் கூறியுள்ளார்.

தனது வாதத்திற்கு அரண் செய்யும் இரண்டு அவசரச் சட்டங்களையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். ஒன்று, கும்பமேளாவிற்குச் சென்ற யாத்ரீகர்கள் மீது போடப்பட்ட யாத்ரீகர் வரி அவசரச் சட்டத்தைப் பற்றியதாகும். மற்றொன்று, ஆட்சேபணைக்குரிய செய்தி அச்சு தடைச் சட்ட கால நீடிப்பு பற்றிய அவசரச் சட்டமாகும்.

கும்பமேளா நடைபெறப் போவதை முன்கூட்டியே சர்க்கார் அறிந்திருக்கிறது. அங்கு வருகிற பக்தர்களுக்கு வரி விதிக்க வேண்டும் என்ற முடிவும் யூனியன் சர்க்காருக்கு முன்கூட்டியே இருந்தாக வேண்டும். பல மாதங்களுக்கு முன்பாகவே தெரிந்துள்ள ஒரு விஷயத்தில், முன்கூட்டியே சர்க்கார் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டு, தங்களுடைய அலட்சிய மனப்போக்கினால் ஏற்பட்ட தவறை சரி செய்ய அவசரச் சட்டத்தின் துணையை நாடுவது, அவசரச் சட்ட ஏற்பாட்டு உணர்விற்குப் புறம்பானதாகும் என்று எடுத்துக் காட்டப்பட்டது. சட்டங்கள் இயற்றுவது பற்றிய ஒரு முன்னேற்பாடு ஆளவந்தார்களிடம் இல்லாத காரணத்தினால்தான், நெருக்கடி காலத்தில் மட்டுமே பிறப்பிக்க உரிமை கொண்டுள்ள அவசரச் சட்ட உரிமையை, சாதாரண காலத்திலும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் சர்க்காருக்கு ஏற்பட்டுவிட்டது என்பதும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

ஆட்சேபணை விஷய அச்சு தடை சட்டத்திற்கு, மேலும் உயிர் கொடுக்கும் ஏற்பாட்டையும் சென்ற பாராளுமன்ற கூட்டத்திலேயே கொண்டுவந்து சர்க்கார் சட்டமாக்கி இருந்தால் அதற்காக ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்காது என்றும் எடுத்துக் கூறப்பட்டது.

அவசரச் சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட விஷயம் சபையில் மசோதாவாகக் கொண்டு வரப்படும் பொழுது, அம்மசோதாவை பொதுவாக விவாதிக்கலமே யல்லாது பகுதி, பகுதியாகப் பிரித்து விரிவாக விவாதிக்க உறுப்பினர்களுக்கு உரிமையில்லாமலும் போகிறது என்றும், 'ஏற்கிறோம் அல்லது மறுக்கிறோம்' என்றுதான் பொதுவாகக் கூறவேண்டிய கட்டாயம் உறுப்பினர்களுக்கு இருக்கிறது என்றும், இப்படி ஒரு விஷயத்தில் அவசர சட்டத்தைப் பிறப்பித்து, அதே விஷயத்தை பாராளுமன்ற ஒப்புதலுடன் சட்டமாக்குவது என்பது பரங்கமான நடைமுறையாகுமென்றும், நெருக்கடி ஏற்படாத நேரத்தில் அவசர சட்டம் பிறப்பிப்பதிலுள்ள அபாயத்தையும், உறுப்பினர்களின் உரிமை பறிக்கப்படுவது குறித்தும டாக்டர் விளக்கமாகக் கூறியுள்ளார்.

இதுபற்றி உறுப்பினர்கள் பேசின நேரத்தில், பேச்சைக் குறைக்க சபைத் தலைவரின் துணையை அமைச்சர் குழுவிலொருவர் நாடியபொழுது, தலைவர் அவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பதில் சர்க்காருக்குள்ள உரிமை பற்றிய முக்கியமான அரசியல் சட்டப் பிரச்சினையாக இருப்பதால், உறுப்பினர்கள் பேச்சில் தாம் குறுக்கிட விரும்பவில்லை என்று குறிப்பிட்டார். அதுவுமல்லாமல் ஒரு சிறந்த பாராளுமன்ற மரபை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு விவாதத்தில் உறுப்பினர்கள் ஈடுபட வேண்டும் என்றும் தலைவர் கேட்டுக்கொண்டார்.

அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்படுவதற்கு முன்பாக, அந்தச் சட்டங்களை ஆராய்ந்து சர்க்காருக்கு முடிவு கூறவும் அதற்கான சூழ்நிலை இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெளிந்து தெரிவிக்கவும், ஒரு சிறு உறுப்பினர் குழுவை நியமிக்க வேண்டும் என டாக்டர் கோரினார். ஆனால் அந்தக் கோரிக்கையை அமைச்சர் குழுவினர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அப்படி ஏற்க மறுத்ததற்கு சர்க்கார் சார்பில் கூறும் காரணம் மகா விசித்திரமானதாகும். அதாவது, அமைச்சர் குழுவினர் தங்களுக்குள்ள அதிகாரத்தை மற்ற உறுப்பினர்களுக்கு விட்டுக் கொடுப்பதில் விருப்பம் கிடையாது என்று விளக்கம் தரப்பட்டுவிட்டது.

இந்த விவாதத்தினால் விளைந்த உருவான பலன் ஒன்றுமில்லையானாலும், காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு உள்ள அதிகார மோகத்தின் தரத்தையும், ஆட்சியாளர்களின் மனப்போக்கையும் விளக்கமாகத் தெரிந்து கொள்ளுகிற ஒரு நிலை நாட்டு மக்களுக்கு ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை. இந்த நிலையை ஏற்படுத்தித் தந்த டாக்டரும், மற்ற உறுப்பினர்களும் பாராட்டத் தக்கவர்களேயாவர்.

★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★

நிதியமைச்சர் அழைக்கவில்லை சென்னை மாவட்ட தி. மு. கழகம் ஏற்றுக்கொண்டது

பதில் அன்பழைப்புக்கு அமைச்சரின் ஒப்புதல் காணோம்!

சென்னை, பிப். 18—

[பெப்ரவரி முதல் வாரத்தில் ஈரோடு பொதுக்கூட்டத்தில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, புதிய கல்வித் திட்டம் குறித்து விவாதித்து முடிவு செய்யலாம் என்று பேசியதை ஏற்றுக்கொண்டு 9—2—54 அன்று சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணபிரான், நிதி அமைச்சர் முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் ஒரு அன்பழைப்பை விடுத்திருந்தார். அந்த அழைப்பை அமைச்சரின் துணைவியார் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால், அமைச்சரிடமிருந்து இன்றுநாள் வரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை. மந்திரியார் மவுனத்தின் மர்மம் யாது என்பதை மக்கள் அறிவார்கள்.

மாவட்டச் செயலாளர் விடுத்த அன்பழைப்பை கூட்டல் குறைத்தலின்றி அப்படியே கீழே பிரசுரித்துள்ளோம். —ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ளவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் அறிய.—ஆ-ர்]

★

9—2—54

உயர் திரு.
சி சுப்பிரமணியம் அவர்கள்,
நிதி அமைச்சர்,
சென்னை.

பேரன்புடையீர்!

வணக்கம். தாங்கள் ஈரோடு பொதுக்கூட்டத்தில், புதிய கல்வி திட்டத்தைக் குறித்துப் பேசியுள்ள விவரத்தை. 6—2—54 'தினத் தந்தி' வெளியீட்டில் படித்தேன். கல்வி திட்டத்தைக் குறித்து விவாதித்து முடிவு செய்யலாம் என்பதாகத் தங்கள் சொற்பொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது—இதுதான் ஜனநாயக முறையுங் கூட!

எனவே, தாங்கள் பேசியது உண்மையாயின், கல்வி திட்டத்தைப் பற்றி விவாதிக்க தங்களது ஒப்புதலை அறிவிக்க வேண்டுகின்றேன்.

தங்களின் பதில் கண்டு, இடமும், பிற விவரமும் அடுத்த கடிதத்தில் தெரிவிக்கின்றேன்.

அன்பன்,
கே. எம். கண்ணபிரான்
செயலாளர்.
தி. மு. கழகம், சென்னை

★★★★★★★★★★★★-★★★★★★★★★★★

யூனியன் சர்க்கார் மனமிரங்க தேவியின் கோயிலில் அழ வேண்டுமாம்!

(:)

கைத்தறியாளருக்கு சி. ஆர். காட்டும் சிறந்த வழி

திருச்சி, பிப். 17—

15—2—54 அன்று மாலை உறையூரில் திருச்சி மாவட்ட கைத்தறி உடை உற்பத்தியாளர், செயலாளர் மகாமி தோழர் பி. என். இராசகோபால் தலைமையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆச்சாரியார் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'கைத்தறியாளர்களைக் கைதூக்கிவிட வேண்டியது மத்திய அரசும், மாநில அரசும்தான்; ஆனால், மத்திய அரசாங்கத்தின் மனம் நம்பக்கம் திரும்ப, பெண்கள் அனைவரும் தேவி கோவிலில் கண்ணீர்விட்டு அழுது விண்ணப்பிக்க வேண்டும்; ஒருவாறு அம்மோது அவர்கள் மனம் திரும்பி உதவுவார்கள்'' என்றார்.

மேலும் அவர் சொன்னார்.

''கடவுளிடத்தில்பக்தி, ஏழைகளுக்கு உதவும் மனப்பான்மை இவைகள் அதிகரித்து, தேவியிடம் அன்பு செலுத்தி, நல்ல மனமுடையவர்களாக இருந்தால், எல்லா நன்மைகளும் உண்டாகிவிடும்,'' என்றார்.

புதுடில்லி, பிப் 19—

ஏழை மக்களுக்கு சிகிச்சை செய்யும் விஷயத்தில் அதிக அக்கரை காட்ட வேண்டியது குறித்து, தக்க நடவடிக்கை எடுக்கும்படி எல்லா மாநிலங்களின் சுகாதார மந்திரிகளையும் இந்திய சுகாதார மந்திரி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

பரமக்குடியில் கண்ணதாசன்

அடக்குமுறைக்குக் கண்டனம்

7—2—54-ல், பரமக்குடி குமரன் படித்துறையில், தி. மு. கழகச் சார்பில், பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு செயலாளர் இரா. அ. பரமசிவம் தலைமை வகித்தார்.

தோழர்கள் கண்ணதாசன், மதுரைமுத்து, அய்யாச்சாமி, வசனபித்தன், அழகிரிசாமி முதலியோர் பேசினர்.

தோழர் கண்ணதாசன் பேசும்போது இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் பஞ்சத்தை, பட்டினியைப் பற்றி சட்டசபையில் பேசுவதே கிடையாது என்று குறிப்பிட்டார். இந்த நேரத்தில் கூட்டத்தில் சலசலப்பை உண்டாக்கினர் காங்கிரசார். போலீசார் தலையிட்டு குழப்பம் செய்தவர்களை அடக்கினர்.

கல்லக்குடி நிதிக்கு ரூ 100 மதுரை வழக்கு நிதிக்கு ரூ 9—9—9 தரப்பட்டது.

புகழுக்கு அடிமையானேன்!

மதுரை, பிப். 17—

மதுரை மிஷன் ஆஸ்பத்திரி விழா ஒன்றில் தலைமை தாங்கிப் பேசும்போது சென்னை மாநில ஸ்தல ஸ்தாபன மந்திரி ராஜாராம் நாயுடு குறிப்பிட்டதாவது:

''எனக்கு இந்த விழாவில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் இல்லாதிருந்தது. ஆஸ்பத்திரி நிர்வாகி எனக்கு எழுதிய கடிதத்தில் மதுரை மாவட்டத்திலேயே இரண்டாவது மனிதனாக என்னைக் கருதி அழைப்பு விடுத்தார். என்னைப் புகழ்ந்து எழுதிய இக்கடிதங்களை இருமுறை படித்தபின்பே நான் விழாவிற்குத் தலைமை தாங்க ஒப்புக் கொண்டேன். நிர்வாகியின் அன்பு மொழிகள் எனக்கு மகிழ்ச்சியை அளித்தது,'' என்றார்.

மனித வர்க்கத்தின் வெற்றியாம்!

தனிப்பட்ட நாட்டின் வெற்றி அல்ல என்கிறார் ஹில்லாரி!

நியூயார்க், பிப். 18—

எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியின் மீது டென்சிங்கும், தானும் ஏறியபோது, பிரிட்டிஷ்—இந்திய—நேபாளக் கொடிகளுடன் ஐ. நா. கொடியையும் நாட்டியதாக சர் எட்மண்ட் ஹில்லாரி ஐ. நா. தலைமைக் காரியாலயத்திற்கு வந்திருந்தபோது குறிப்பிட்டார்.

எவரெஸ்ட் வெற்றி, எந்த நாட்டினரின் தனிப்பட்டவெற்றி அல்லவென்றும், அது மனித வர்க்கத்தின் வெற்றி என்றும் ஹில்லாரி கூறினார்.

அந்த எண்ணம் மட்டும் கிடையாதாம்!

கொழும்பு, பிப், 17—

தனிப்பட்டவர்கள் அல்லது வெளிநாட்டு தொழில்களைத் தேசிய மயமாக்கும் உத்தேசமோ, அந்நிய மூலதனத்தை சுவீகரித்துக் கொள்ளும் உத்தேசமோ சர்க்காருக்குக் கிடையாது என்று இலங்கை நிதிமந்திரி சர். ஆலிவர் குணதிலகா கூறியுள்ளார்.

—O—

பாட்னா, பிப். 13—

பீகாரில் 1,49 641 மெட்ரிகுலேட்டுகளும், 52,137 பி. ஏ., பட்டதாரிகளும் இருக்கிறார்கள். இவர்களில் எவ்வளவுபேர் வேலை இல்லாமலிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

கழகச் செய்திகள்

★

செஞ்சி வட்டம் தி. மு. கழக உறுப்பினர் தேர்தல்

14—2—54 காலை 10 மணியளவுக்கு தென்பாலை தோழர் டி. சீனுவாசன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. புதிய செயற் குழுவிற்குத் தோழர்கள் ஏ. ஏ. குணரஷி செயலாளராகவும், ஏ. வடிவேல் துணைச் செயலாளராகவும், ஏ. அண்ணாமலை பொருளாளராகவும், உறுப்பினர்களாகத் தோழர்கள் ஏ. வடிவேல், வெங்கடாசலம், ஆர் என் மணி, க. ராமசாமி, அண்ணாமலை ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட பிரதிநிதியாக தோழர் வெங்கடாசலம் அவர்களை நியமித்ததுடன், 7-3-54ல் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரைக்கு வரவேற்பளித்து, அதற்கு நிதிக்கு ரூ. 101 தருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அக்கிசெட்டிபாளையம் தி. மு. க. கிளை துவக்கம்

24—1—54-ல் அக்கி செட்டிபாளையத்தில் (ஆத்தூர் வட்டம்—சேலம்) தி. மு க. அமைப்புக் கூட்டம் தோழர் என். கே. இராசு தலைமையில் தி மு. கழகம் அமைக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: எ. அண்ணாமலை; துணைச் செயலாளர்: வி. துரைசாமி; பொருளாளர்: எஸ். மூக்கன்; மாவட்டப் பிரதிநிதி: வி கந்தசாமி; செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: தங்கவேலு, மாணிக்கம், எ. நாராயணன், டி. ராமசாமி, என். தேவராசு, பி. கிருஷ்ணன், அப்பு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

கழகத் துவக்க விழாவை மார்ச்சு மூன்றாம் வாரத்தில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

பத்தமடையில் தி. மு. கழகக் கூட்டம்

13—2—54 இரவு 8 மணிக்கு, கார்த்தி திடலில், தோழர் மணிமொழி தலைமையில், தோழர் குணங்குடியான் இயக்கப் பாடலுடன் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ச. வீரபாகு, ஆ திராவிடமணி ஆகியோர் புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி பேசினர். பின்னர், தோழர் என். எஸ். இளங்கோ புதிய கல்வித் திட்டத்தின் கேடுதலைப் பற்றியும், கும்பமேளா விழாவைப் பற்றியும், புள்ளி விவரங்களுடன் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார். தோழர் பரமசிவன் நன்றி கூறினார்.

பொட்டனேரி தி. மு. கழகம்

15—2—54 பகல் 3 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் எ. வெங்கடாசலம் தலைமையில், செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது அதுபோது, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மார்ச்சு 1-ந் தேதி மேட்டூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கு வருகையில், கழகச் சார்பில் தேனீர் விருந்தளித்து அத்தாக்குடி நிதிக்கு பணம் அளிப்பதென்றும் இவ்வூர் கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பேத்தநாய்க்கன் பாளையத்தில் தி.மு.க. பொதுக்கூட்டம்

15—2 54 மாலை 6½ மணிக்கு தி. மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் எம. பி சுப்பிரமணியம் தலைமையில், மாரியம்மன் கோவில் திடலில் நடைபெற்றது. தோழர்கள் பூ. கணேசன், என். அப்பாவு ஆகியோர் பேசினர்,

தொளார் தி. மு. கழக செயற்குழு தேர்தல்

13—2—54ல், தோழர் வே. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் சி. சேரன் செயலாளராகவும், வ. சின்னத்தம்பி துணைச் செயலாளராகவும், வே. சண்முகம் பொருளாளராகவும், மு. ஆதிமூலம் மாவட்ட பிரதிநிதியாகவும், வே. கோவிந்தசாமி, பொ. வடிவேலு, க. தர்மலிங்கம், க. முருகேசன், வி. தர்மலிங்கம், ஆ. நல்லதம்பி, வை. ஆறுமுகம், ரா. இளையபெருமாள், ஆ. மாயகிருட்டிணன், ச. ராமசாமி, மு. ரெங்கசாமி ஆகியவர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தொட்டம்பாளையம் தி. மு. கழகம்

13—2—54 இரவு 8 மணியளவில் செயற்குழு கூட்டம் தோழர் ஏ. எம். ராசு தலைமையில் நடைபெற்றது. தோழர் கண்ணதாசன் குழுவினரின் தன்னடவடிக்கையைக் கண்டித்தும் அவர்களை உடனடியாக விலக்கச் செய்யக் கோரியும், மார்ச் மாதம் முதல் வாரத்தில் பொதுக் கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. பின்னர், வரவு—செலவு சரிபார்த்து ஒத்துக் கொள்ளப்பட்டது.

பெண்ணாடம் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

10—2—54 மாலை, வாசுதேவன் திடலில், தி. மு. கழகச் சார்பில், பொதுக் கூட்டம் தோழர் எம் ரெங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் சி. முனுசாமி, ஆர். பாலகுருசாமி, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகியோர் 'இன்றைய ஆட்சியின் அவலநிலை'யைப் பற்றிப் பேசினர்.

போளூர் (சேத்துப்பட்டு) தி. மு. கழகம்

12—2—54 இரவு 10 மணியளவுக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் சா. கோவிந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் சி. டி. கோவிந்தன் செயலாளராகவும், சா. கோவிந்தன் துணைச் செயலாளராகவும், கா. செல்வம் பொருளாளராகவும், ச. கண்ணன் விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மாவட்ட உறுப்பினர்களாக தோழர்கள் மு. வேதகிரி, க நாகராசன் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

11—2—54 இரவு 8 மணியளவில் தோழர் எஸ். பி. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எஸ். மலைதாசன், விக்டர் பென்னியமேன், எம். என். கணபதி, வடிவேல் ஆகியோர் கழக வளர்ச்சி குறித்துப் பேசினர். தோழர் எஸ். தியாகராசன் நன்றி கூறினார்.

வல்லம்படுகை தி. மு. கழகம்

14—2—54ல், தோழர் துரைசாமி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கூட்டத்தில், பொதுக் கூட்ட வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டன, தோழர்கள் அஞ்சாபிலியின் குழந்தை, துரைசாமி தாயார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழக சட்ட திட்ட திருத்தம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்ட விதிகளில் மாற்றமோ, திருத்தமோ, சேர்ப்போ செய்ய நினைக்கும் **பொதுக் குழு உறுப்பினர்கள்**, அவற்றைத் தீர்மான வடிவில் எழுதி 28-2-54-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

"அறிவகம்,"
சென்னை,
10—2—54.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.

மாப்பிள்ளையூரணி தி. மு. கழகம்

14—2—54 மாலை 6 மணியளவில செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். வெட்டும்பெருமாள் தலைமையில் நடைபெற்றபோது, அத்தாக்குடி நிதிக்கு பணம் திரட்டி கொடுப்பதெனவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

புதுக்கோட்டையில் பொதுக்கூட்டம்

15—2—54 மாலை 6 மணிக்கு டவுன் சாந்தநாதபுரம் 4ம் வீதியிலுள்ள கழகக் கட்டிடத்தில், தோழர் எம். என். ராமசாமி அவர்களால் கொடியேற்று விழாவும் சொற்பொழிவும் நடைபெற்றது.

அன்று மாலை 6 மணிக்கு 3-ம் வீதியில் அமைக்கப்பட்டிருந்த பொதுமேடையில் தோழர் க. ஞானமுத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். என். ராமசாமி, சி பி சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நகர கமிட்டி, இவ்வாண்டில் குறைந்தது 10 கிளைகளை நிறுவி, தற்சமயமுள்ள கமிட்டியைக் கலைத்துவிட்டு எல்லாக் கிளையிலிருந்தும் உறுப்பினர்களைக் கொண்ட ஓர் மத்திய கமிட்டியை நிறுவுவதென்று தீர்மானித்துள்ளது.

கருணாநிதி கலை மன்றம்

தேவக்கோட்டை, பிப் 17—

மன்ற அமைப்புக் கூட்டம் தோழர் இராம. வெள்ளையன் தலைமையில 31—1—54ல் நடைபெற்றது அதுபோது, தோழர்கள் தியாகராசன் தலைவராகவும், உ. சீனிவாசன் செயலாளராகவும், எம். ராமநாதன் துணைச் செயலாளராகவும், கா. மாரிமுத்து பொருளாளராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அழகிரி படிப்பகத் துவக்க விழா

கோவை, பிப். 16—

13—2—54ல், புலியகுளத்தில் மாலை 7 மணிக்கு தோழர் கிருஷ்ணன் தலைமையில் துவக்க விழா நடைபெற்றது. தோழர் அ பழனிச்சாமி 'அழகிரி' படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். தோழர்கள் பலர் பேசிய பின்பு, தேனீர் விருந்தும், இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.

மூகலூர் அண்ணா படிப்பகம்

10—2—54 இரவு 9 மணிக்கு செயற்குழுக் கூட்டம் தோழர் மா. முத்துச்சாமி தலைமையில் கூடியது. வரவு-செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டது தோழர்கள் மீ அழகப்பன், பெ. சங்கரலிங்கம் பேசினர் பின்னர், அத்தாக்குடி நிதிக்கு பணம் அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

காஞ்சிபுரம்

21—2—54 மாலை 6 மணிக்கு
இடம்: கெங்கைகொண்டான் மண்டபத்தருகில்
தலைவர்: இரா. வெங்கடேசன்
பேசுபவர்:
நாஞ்சில் கி. மனோகரன்

★

திருச்சி

21—2—54 மாலை 6 மணிக்கு
இடம்: அழகிரி பந்தல் (சென்ட்ரல் டாக்கீஸ் பின்புறம்)
தலைவர்: எம். ஏ. சாபதீன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஏ. பி. தர்மலிங்கம்
எம். எஸ். மணி
எல். கணேசன்

★

காட்டுப்பாடி

21—2—54 ஞாயிறு மாலை
தலைவர்: சிருட்டினராஜ்
பேசுவோர்;
எஸ். எஸ் ராஜேந்திரன்
சி. ஏ வரதராஜன்

★

வேலூர்

21—2—54 ஞாயிறு மாலை
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

தென்காசி வட்டாரக் குழு அழைப்பு

★

'தென்காசி வட்டாரக் குழுக் கூட்டம் 21—2—54-ல். புல்லுக்காடு தி. மு. கழகம் ஜனி மனையில் கூட்டவிருப்பதால், கிளைக் கழகச் செயலாளர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறேன்," என கிழப்பாவூர் செயலாளர் அரு. இராமநாதன் அறிவிக்கிறார்.

பாரதிதாசன் நூல் நிலையம்

சென்னை, பிப். 16—

14—2—54 காலை 10 மணியளவில் தோழர் வை. மேகநாதன் அவர்களின் தலைமையில் அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலையத்தின் பொது அங்கத்தினர் கூட்டம் நடைபெற்றபோது, செயலாளராக: அ. ஏ. லோகநாதன்; துணைச் செயலாளராக வை. மேகநாதன்; பொருளாளராக அ கோ. தனபாலன்; செயற்குழு உறுப்பினர்களாக கோட்டி, செங்கையன், இராமகிருஷ்ணன், ஆதிமூலம், க. ராமு, வை. நரசிம்மன், வீரபத்திரன், ஜெகந்நாதன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவள்ளுவர் முன்னணி கழகம்

தலைவர்கள் படத்திறப்பு விழா

சென்னை, பிப். 17—

6—2—54 மாலை 7-30 மணியளவுக்கு சென்னை பெத்தநாய்க்கன் பேட்டையில், மேற்படி கழகத்தில் நடைபெற்ற படத்திறப்பு விழாவுக்கு தோழர் பி. ஆர். பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். தோழர் டி. எம். முத்துவேல் (ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்) பொதுச் செயலாளர் அண்ணாதுரை படத்தையும், தோழர் என். வி. நடராசன் (தி. மு. க.) காந்தியார் படத்தையும், தோழர் ஜி. உமாபதி (தமிழரசுக் கழகம்) பெரியார் ஈ. வே. ரா படத்தையும் திறந்து வைத்தனர். தோழர் முத்துவேல் பேசுகையில், தோழர் அண்ணாத்துரை தமிழுக்குப் பெரிதும் பாடுபட்டவர் என்றும், தமிழ் இவ்வளவு முன்னேறியதற்கு அவரே காரணம் என்றும் குறிப்பிட்டார்.

மஜீத் மன்றம்

சென்னை, பிப். 16—

14—2—54 காலை 10 மணியளவில் 12-வது வட்டம் சென்னை மஜீத் மன்றம் நிறுவப்பட்டபோது, தி. பா. தம்பித்துரை செயலாளராகவும், க. மா. அப்துல்சலாம் துணைச் செயலாளராகவும், கும்பகர்ணன் பொருளாளராகவும், முத்து, முனுசாமி, எழிலன், க. மா. அ. ரசாக், தங்கமணி, வி. ஆறுமுகம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோசிப்பாளையம்—மதுரை சிங்காரவேலர் நினைவு படிப்பகம்

7—2—54ல், தோழர் இ. கிருட்டினன் தலைமையில் செயற்குழு நடைபெற்றபோது படிப்பகத்தின் இரண்டாவது ஆண்டு விழா நடத்த வரவேற்புக் கமிட்டியும், ஆண்டு விழாக் கமிட்டியும் நிறுவப்பட்டதுடன், வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பிறையாறு இஸ்லாமியா கலைக் கழகம்

5—2—54-ல் ம. மு. முகம்மது மகதூம் தலைமையில் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அதுபோது, தோழர்கள் ம. மு. முகம்மது மகதூம் தலைவராகவும், அ. குலாம் துணைத் தலைவராகவும், எம். எச். ஏ கனி; எச். மொய்தீன் செயலாளர்களாகவும், எம். முகம்மதுகாசிம் பொருளாளராகவும், மற்றும் ஏழு செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உப்புத் தொழிலாளர் பொதுக் கூட்டம்

அத்தாக்குடி உப்புத் தொழிலாளர் சங்கச் சார்பில், 16-2-54 மாலை 6 மணியளவில் கோரம்பள்ளம் அளத்தின பக்கமுள்ள மைதானத்தில் தோழர் கே. ஞானமுத்து தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம், சங்க ஆக்கவேலைகளைக் குறித்தும், சம்பளப் பிரச்னைகளைக் குறித்தும், தோழர்கள் வே. ஏசுதாசன், வெ. அருணாசலம் ஆகியவர்கள் பேசியபின், தலைவர் விளக்கவுரையுடன் கூட்டம் முடிந்தது.

'முத்தமிழ்' சொற்பொழிவு

திருச்சி, பிப். 18—

திருச்சி ஜமால் முகமது கல்லூரி தமிழ் கழகச் சார்பில் 15—2—54 அன்று விழா கொண்டாடப்பட்டது. கல்லூரித் தமிழாசிரியர் திரு. கோவிந்தசாமி தலைமை வகித்தார். தோழியர் அருள்மொழி அவர்கள், "முத்தமிழ்" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

செய்திச் சுருக்கம்

கோலாலம்பூர், பிப். 19—
இந்தியாவில் இந்து விவாக சீர்திருத்தம் விஷயமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை மலேயா சர்க்கார் அதிகாரிகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

* * *

சென்னை, பிப். 18—
1954—55ல், சென்னையில் சக்கடைகள் கட்டுவதற்காக ரூ. 2 லட்சம் நகர சபை கடன் கோரியிருந்தது. சென்னை சர்க்கார் இதற்குச் சம்மதிக்கவில்லை.

கல்கத்தா, பிப். 18—
மேற்கு வங்கத்தில் சணல் உற்பத்தி இவ்வாண்டில் 5,34,700 ஏகராக்களில் செய்யப்படும் என்றும், 14,98,402 பேல்கள் உற்பத்தியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடில்லி, பிப் 18—
உள்நாட்டுச் சர்க்கரை சப்ளை நிலைமையில் எதிர்பார்க்கப்படுகிற தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக இந்திய சர்க்கார் உடனடியாக சர்க்கரையை இறக்குமதி செய்ய முடிவு செய்திருக்கிறார்கள்.

* * *

லண்டன், பிப். 18—
கிழக்காப்பிரிக்காவிலுள்ள கானியிலின் சர்க்காரிகள் ஐப்பானிய துணி இறக்குமதிக்கான தடையை இன்னும் சட்டு மாதங்களுக்கு நீடிக்க முடிவு செய்துள்ளது. இந்தியத் துணி தொழிலுக்கு, இது நல்ல செய்தியாகுமெனக் கூறப்படுகிறது.

* * *

புதுடில்லி, பிப். 18—
1953-54ல், வ்தல அபிவிருத்தி வேலைகளுக்காக ஆந்திர மாநில சர்க்காருக்கு நடப்பு ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் பாதி. (அதாவது 7.38 லட்சம் ரூபாய் முன் பணமாக அளிக்கப்பட்டிருக்கிறது என்று) மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

புதுடில்லி, பிப். 18—
பற்றுக்குறையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நிரந்தர அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக, ஐந்து ஆண்டுத் திட்டத்தில் தமிழகத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 40 கோடி ரூபாயில் மைசூரின் பங்கு 3.5 கோடி ரூபாயாகும் என்று நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் கூறினார்.

பெர்லின், பிப். 19—
ஹிட்லர் 1938 மார்ச் 2-ந் தேதி எழுதி வைத்த உயில் ஒன்று இப்பொழுது வெளியிட்டிருக்கிறது. நாஜி கட்சிக்கு தன் சொத்தை யெழுதிவைப்பதாகவும், அப்போது 17 வயதுள்ள ஈவாபிரானுக்கு மாதம் 1,000 மார்க்குகள் தரப்படவேண்டும் என்றும் அந்த உயிலில் எழுதி வைத்திருக்கிறார்.

* * *

ஹாங்காங், பிப். 18—
ஹைனான் தீவை யிரண்டு கருப்புகள் மீண்டும் கைப்பற்றப் போவதாக அறிவிக்கப்பட்டதின் காரணமாக அத்தீவிலுள்ள சீனக் கம்யூனிஸ்டு அருப்புகள் யுத்த சன்னத்தமாகிவிட்டன. சென்ற யுத்தத்தின்போது ஹைனான் தீவைத் தளமாகக் கொண்டே மலேயா, பிலிப்பைன் முதலிய தீவுகள்மீது படையெடுக்கப்பட்டது.

* * *

கல்கத்தா, பிப். 19—
"இந்தியாவின் நாடோடி நடனங்கள், மலை ஜாதியினர் நடனங்கள் ஆகியவைகள் மூலம் நல்ல தேசப்பயிற்சி ஏற்படும்; இவைகளை அடிப்படையாகக் கொண்டே இந்தியாவின் தேசப் பயிற்சிக் கல்வி முறையை வகுக்க வேண்டும்" என்று அமெரிக்க தேசப் பயிற்சி நிபுணர், இந்திய சர்க்காருக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை சுற்றுப் பயணம்

★

சென்னை, பிப். 19—
பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் ஈ. வெ. கி. சம்பத், அ. பொன்னம்பலனார் ஆகியவர்களுடன் கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள்.

பிப். 21: மதுரையில்—தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்.

" 22: பட்டிவீரன்பட்டியில், மறைந்த மாவீரர் ஊ. பு. அ. சௌந்திர பாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நினைவு விழா; தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம், இரவு நடிகர் எம். ஜி. ஆர். குழுவினரின், "இன்பக் கனவு" நாடகம்.

" 23: சிவகாசியில் — தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்.

நடக்க இருப்பவை

அஸ்திவாரக்கல் நாட்டு விழா

ஜலகண்டபுரம், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி கட்டிடத்திற்கென்று வாங்கப்பட்டுள்ள நிலத்தில், 21-2-54 காலை 10 மணிக்கு, சேலம் ஜில்லா கலெக்டர் பி. சபாநாயகம், அவர்களால் அஸ்திவாரக் கல் நாட்டு விழா நடைபெறும்.

★

வ. ஆ. ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளன கமிட்டி கூட்டம்

"21-2-54 பகல் 2 மணிக்கு, கமிட்டி கூட்டம் வாணியம்பாடி கோணாமேடு சம்மேளனக் கட்டிடத்தில் நடைபெறும். பல முக்கிய பொருள் பற்றி ஆலோசிக்க வேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் தவறாது வரும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது.

"அன்று மாலை 6 மணிக்கு, தோழர் கே. எம். சாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் எம். ஆதிமூலம், எம். சி., எம். கிருஷ்ணசாமி, எம். தனபால், ஜே ஜெகநாதன் மற்றும் பலரும் பேசுவார்கள்," என்று செயலாளர் ஜி. என். ஆனந்தன் அறிவிக்கிறார்.

★

ஆண்டு விழா

வாணியம்பாடி, (வ. ஆ) இஸ்லாமியக்கல்லூரி, தமிழ் மாணவர் மன்றம், ஆண்டு விழா, 21—2—54 மாலை 6 மணிக்கு, தோழர் தா. பரந்தாமன் தலைமையில் நடைபெறும். தோழர் க. அன்பழகன், 'கலையும் வாழ்வும்' என்பது பற்றி பேசுவார்.

★

அரசாங்க பதிவில்லா ஊழியர் சங்க மாநாடு

21—2—54ல், அரசாங்க பதிவில்லா ஊழியர்கள் மாநாடு மன்னார்குடியிலுள்ள கல்கி டாக்கிஸில், உபதலைவர் தோழர் கே. சி. வேலாயுதம் தலைமையில் நடைபெறும்.

லண்டன், பிப். 19—
பிரிட்டிஷ் பார்லிமெண்ட் உறுப்பினர்கள், ஆண்டுதோறும் தங்களுக்கு 500 பவுன் சம்பள உயர்வும், பென்ஷன் முறையும் ஏற்படுத்தவேண்டும் என்றும் வற்புறுத்தி வருகின்றனர்.

மதுரைக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை சம்பத் வருகை

21—2—54 காலை 10 மணிக்கு தோழர் கண்ணதாசன் தலைமையில், தல்லாகுளம் பெருமாள் கோவில் திடலிலிருந்து ஓர் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்படும். மாலை 6 மணிக்கு, தோழர்கள் அண்ணாதுரை, ஈ. வெ. கி. சம்பத், கண்ணதாசன் ஆகியோர் பேசுவர். பல கழகங்களின் சார்பில் தோழர் அண்ணாதுரையிடம் தூத்துக்குடி வழக்கு நிதி தரப்படும்.

—மதுரை நகர் தி.மு.கழகம்.

மதுரையில் நாடகம்

21—2—54 இரவு 10-30 மணிக்கு, மதுரை செல்லம் தியேட்டரில், தோழர் அண்ணாதுரை தலைமையில், தோழர் எம். அய்யாச்சாமி எழுதிய 'வேஷம் பதுமை' நாடகம் நடைபெறும்.

திருச்சி தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

21-2-54 காலை 10 மணியளவில், 20-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுசமயம் இரண்டாவது ஆண்டிற்கான செயற் குழு தேர்தல், நகர செயலாளர் தோழர் எம். எஸ். மணி அவர்கள் தலைமையில் நடைபெறும். கழக உறுப்பினர்கள் தவறாது வர வேண்டுகிறேன் என செயலாளர் வி. குப்புசாமி அறிவிக்கிறார்.

ஆட்சியை கண்டித்ததின் எதிரொலி!

இராணுவக் கோர்ட்டில் விசாரணையாம்!

பம்பாய், பிப். 18—
போர்ச்சுகீசிய ஆட்சி நீடிப்பதைக் கண்டித்துப் பேசியதாகவும், சர்க்காருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் கோவாவைச் சேர்ந்த பிரபல டாக்டரான புண்டலீக கெய்தாண்டேயை போர்ச்சுகீசிய சர்க்கார் கைது செய்திருக்கிறது. லிஸ்பன் இராணுவக் கோர்ட்டில் விசாரிக்கப்படுவதற்காக, இவர், கப்பலில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

இருவர் மட்டுமே போட்டியிடுகின்றனர்!

சென்னை, பிப். 18—
சென்னை மேல்சபையில் எஸ். பி. ஆதித்தன் ராஜிநாமா செய்ததால் ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கு, சென்னை மதுவிலக்கு மந்திரி ஜோதி வெங்கடாசலமும், திரு ஜி. டி. நாயுடுவும் மட்டுமே போட்டியிடுகிறார்கள். தோழர்கள் சி. ஆ. பே. விஸ்வநாதனும், வீரப்ப செட்டியாரும் தமது நியமனப் பத்திரத்தை வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

இந்த உபதேர்தல் பிப்ரவரி 27-ந் தேதி காலை 9 முதல் 1-மணி வரையிலும், மாலை 2 மணிக்கும் சட்டசபை அலுவலகத்தில் நடைபெறும்.

நன்றி மறவாத மக்கள்!

பெங்களூர், பிப். 18—
மைசூர் மாநில செஞ்சிலுவை சங்கத்தார் கொடுத்த 98 பவுண்டு கள் உணவு தானியத்துக்கு நன்றிக்கறிகுறியாக, ஜலஹல்லியிலிருந்து சிவகோட்டைக்குச் செல்லும் 5½ மைல் நீளமுள்ள அழகான பாதையை 5 மாத காலத்திற்குள் கிராம மக்களே போட்டுள்ளனர்.

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டுகட்கு

★

'நம் நாடு' வில் பாக்கியை அனுப்பி வைக்காத தோழர்கட்கும், டிபாசிட் தொகையைவிட அதிகம் பாக்கியுள்ள தோழர்கட்கும் 'நம் நாடு' அனுப்புவதை நிறுத்தப்பட்டிருக்கின்றது. இங்கு பாக்கி ரூபாய் வந்து சேராமல், 'நம் நாடு' அனுப்ப முடியாதென்பதையும், கடிதங்கள் எழுதி வீணாகத் தவணைகள் கேட்பதினால் எவ்வித பயனுமில்லை என்பதையும் வெளியூர் ஏஜண்டுத் தோழர்கள் அறிய வேண்டுகின்றோம். முன் பாக்கியுள்ள தோழர்கள் விபரங்களையும், 7—3—54-ல் திருச்சியில் கூடும் தி. மு. கழகப் பொதுக் குழுவில் பரிசீலனைக்கு வைக்கப்படும் என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கின்றோம்.

இராயபுரம், சென்னை
19—2—54

பொறுப்பாளர்,
'நம் நாடு'

ஆபாசமான புத்தகங்கள் விற்பனை

கடைக்காரர்களின் தந்திரம்!

கல்கத்தா, பிப். 20—
ஆபாசமான புத்தகங்களை ஒழித்துக்கட்ட போலீசார் மும்முரமாக இருப்பதைக் கண்ட கடைகாரர்கள் அவைகளை அப்படியே பதுக்கிவிட்டனர், தாகர்களைக் கொண்டு இப்புத்தகங்களை விற்று வருகிறார்களாம். இப்போதுள்ள சட்டத்தின் அதிகாரங்களைக் கொண்டு இதைத் தடுப்பது சாத்தியமாக இல்லை என்றும், அதிக அதிகாரங்களைத் தரும் சட்டங்களே அவசியம் என்றும் போலீஸ் அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

கயானா தலைவர்கள் நாடு திரும்பினர்

மக்களின் குதூகல வரவேற்பு

ஜார்ஜ் டவுன், பிப். 17—
பதவியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் கயானா பிரதமர் செட்டி ஜெகன், முன்னாள் கல்வி மந்திரி எல். எப். எஸ். பர்ன்ஹாம் விமான மூலம் இங்கு வந்து சேர்ந்தனர்.

விமான நிலையத்திலிருந்து நகருக்கு வரும் ரோடுகளின் இருபுறங்களிலும் 30,000-த்திற்கு மேற்பட்ட மக்கள் மிகக் குதூகலமாக அவர்களை வரவேற்றார்கள். வரவேற்றவர்களில் பெரும்பாலோர் இந்தியர்களும், நீக்ரோக்களுமாவர்.

'சொர்க்க சோளம்'

—:0:—

பண்ணைகள் மீது நடவடிக்கை எடுக்க யோசனை

புதுடில்லி, பிப். 18—
ஊமத்தை விதை கலந்த உணவுப் பொருள்களை விற்ற 33 ஆஸ்திரேலியப் பண்ணைகள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி முயற்சி செய்யுமாறு ஆஸ்திரேலியாவிலுள்ள இந்தியப் பிரதிநிதியை இந்திய சேட் கேட்டுள்ளது

விற்பனை வரி எதிர்ப்பு பொதுக் கூட்டம்

தூத்துக்குடி வள்ளுவர் கழகச் சார்பில், 14—2—54 மாலை 6-க்கு வள்ளுவர் திடலில், தோழர் ஆர். கே. பெருமாள் தலைமையில், விற்பனை வரி எதிர்ப்பு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம், விற்பனை வரியின் கொடுமைகளைக் குறித்தும், அரசாங்கத்தின் பிடிவாதத் தன்மையைக் கண்டித்தும் தோழர்கள் பா. ராசமணி, அலிசேக்மன்சூர் த. பால்பாண்டியன் பிச்சைமணி, வே. ஏசுதாசன் ஆகியவர்கள் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

தபால்-தந்தி இலாகா, தினமொன்றுக்கு 25,92,000 தபால் கார்டுகளையும், பல்வேறு கட்டண மதிப்புள்ள 96,00,000 தபால் பில்லைகளையும் அச்சிட்டு வருகிறது; மேலும் அது 3,60,000 விமானக் கடிதங்களையும், 8,64,000 இரண்டணா தபால்கவர்களையும் அச்சிட்டு வருகிறது.

ஜின்னு அவாமி லீக் தலைவர் தாக்கப்பட்டார்

கொமில்லா (கி பாக்) பிப். 18—
சென்ற வெள்ளிக்கிழமை ஹாஜிகஞ்ச் என்ற இடத்தில் ஜின்னு அவாமி (போட்டி) லீக் தலைவர் எச். எஸ். சுகர்வர்த்தி தாக்கப்பட்டதாகத் தெரிகிறது. யாரோ சிலர் ஏக காலத்தில் அவரது தலையில் கழிகளால் அடித்துவிட்டார்களாம். அடித்தவர்களில் ஒருவரை அவாமி தொண்டர்கள் கட்டிப்பிடித்ததாயும், ஆனால் அவர் அந்த நபரை விட்டு விடும்படி உத்திரவிட்டதாயும் கூறப்படுகிறது.

இங்கர்சால் வைத்தியசாலை திறப்பு விழா

15—2—54 மாலை 6 மணிக்கு சென்னை இராயபுரம், சூரிய நாராயண செட்டி தெருவில், கெ. 64 எண்ணுள்ள கட்டடத்தில், தோழர் அன்புமதி தலைமையில், வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதுபோது, நீல மன்றம், நாஸ்திக கழகம், காசிமேடு மீன்பிடிப்போர் வாலிபர் சங்கம் ஆகியவைகள் சார்பில், வைத்தியசாலையின் உரிமையாளர் டாக்டர் எம். நாராயணசாமி அவர்களுக்கு வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டது.

நமது சமுதாய மூடநம்பிக்கையின் காரணமாய் சாதாரண நோயையும் பெரிய தாக்கிக் கொள்ளும், பாமர மக்களின் அறியாமையையும், வைத்தியத்தின் தற்கால அவசியத்தைப் பற்றியும், டாக்டர் நாராயணசாமி அவர்களின் பண்பைப் பாராட்டியும், தோழர்கள் எம். ஆர். சி. இராமச்சந்திரன் என். நாராயணசாமி, ஏ. நெடுஞ்செழியன், கே குப்புராஜ் ஆகியோர் பேசினர்.

திருமணம்

பரமக்குடி, பிப். 18—
தோழர் சோமசுந்தரத்திற்கும்—தோழியர் முத்தம்மாளும் பிகைக்கும், மதுரை தோழர் முத்து அவர்கள் தலைமையில், காலை 10 மணிக்கு திருமணம் நடந்தேறியது. தோழர்கள் கண்ணதாசன், அய்யாச்சாமி, வசவப்பித்தன், இரா. அ. பரமசிவம் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இரவு, தோழர்கள் பி. எஸ் செல்வம், சி. ஆர். சௌந்தரராசன் குழுவினர் இசைவிருந்தும் நடைபெற்றது. மண மக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வந்தன. இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 5 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது — வரப் பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.